தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 54/பேரூ/2023
நாள் 08.05.2023

திரு.கல்லை M. சிந்தா,
தென்திருப்பேரை,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
தென்திருப்பேரை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் தாலுக்கா, தென்திருப்பேரை அஞ்சல், கீழக்கல்லாம்பாறை, எண்.82 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கல்லை M. சிந்தா என்பவரின் 02.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2023 அன்று பெறப்பட்டு 54/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் தாலுக்கா, தென்திருப்பேரை அஞ்சல், கீழக்கல்லாம்பாறை, எண்.82 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கல்லை M. சிந்தா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தென்திருப்பேரை பேரூராட்சியில் 11வது வார்டு மேலக்கல்லாம் பாறையில் வசிக்கும் சுடலைகோனார் மகன் திரு.ஆறுமுக நயினார் என்பவர் அரசு இடத்தை ஆக்கிரமித்து 1500 சதுரடி பரப்பளவு கொண்ட 25 அடி உயரம் அளவுக்கு தென்திருப்பேரை பேரூராட்சியில் எந்தவித அனுமதியும் பெறாமல் கட்டடம் கட்டி உள்ளார். இந்த கட்டடத்தை அரசு விதிகளின்படி உடனடியாக கட்டடத்தை மூடி சீல் வைக்கவும், கட்டடத்தை அப்புறப்படுத்தவும் அரசாணை எண்.540–ன் கீழ் தக்க நடவடிக்கை எடுக்க தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு புகார் மனு கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக நான் கொடுத்த மனு மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க, ஆக்கிரமிப்பாளர்களிடம் செயல் அலுவலர் கையூட்டு பெற்று கொண்டு நடவடிக்கை எடுக்க மறுத்து வருகிறார். செயல் அலுவலர் அவர்கள் பலவழிகளில் ஊழல் செய்து

வருகிறார். ஆகையால் அரசு இடத்தை ஆக்கிரமித்து கட்டிய கட்டடத்தை அப்புறப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க மறுக்கும் தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறைரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

(3) தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் குறித்து தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவில்லை.

(4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலரும், 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) மனுதாரர் திரு.கல்லை M. சிந்தா என்பவர் 19.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தென்திருப்பேரை பேரூராட்சியில் 11வது வார்டு மேலக்கல்லாம்பாறையில் தனியர் ஒருவர் சுமார் 1500 சதுர அடி பரப்பளவு கொண்ட அரசு புறம்போக்கு இடத்தை ஆக்கிரமித்து தென்திருப்பேரை பேரூராட்சியில் எந்தவித அனுமதியும் பெறாமல் கட்டடம் கட்டி நெல் மற்றும் வைக்கோல் குடோன் வைத்து நடத்தி வருகின்றார். அந்த கட்டடத்தை அரசு விதிகளின்படி உடனடியாக மூடி சீல் வைத்திடக்கோரி தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் ஆக்கிரமிப்பாளர்களுடன் கைகோர்த்து பல முறைகேடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பினை உடனே அகற்றிட தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) எதிர்மனுதாரரான தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ரமேஷ்பாபு என்பவர் 19.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள தென் திருப்பேரை பேரூராட்சி வார்டு எண்.3 மேலக்கல்லாம்பாறையில் உள்ள திரு. ஆறுமுகநயினார் என்பவர் எவ்வித வரைபட அனுமதியுமின்றி கட்டடம் கட்டியது தொடர்பாக 20.1.2021 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேற்கண்ட இடத்தை மீன் விரலிகள் வளர்ப்புப் பண்ணை அமைக்க மீன்வளத் துறை, நிலமாற்றம் செய்துத் தர கடந்த 11.8.2022 அன்று பேரூராட்சிக்கு கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து மேற்கண்ட இடத்தில் அரசு மீன் விரலிகள் வளர்ப்புப் பண்ணை அமைத்திட மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பேரூராட்சியிலிருந்து ஏரல் வட்டாட்சியருக்கு 20.1.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட நெல் மற்றும் வைக்கோல் குடோனுக்கு கட்டட வரைபட அனுமதியை சமர்ப்பிக்கத் தவறியதைத் தொடர்ந்து, மேற்கண்ட குடோனுக்கு மேல் நடவடிக்கையாக Lock and seal Notice பேரூராட்சியால் அனுப்பப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக வழங்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் வட்டாட்சியர் கடிதங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:--

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், தென்திருப்பேரைச் சேர்ந்த மனுதாரர் திரு. கல்லை M. சிந்தா என்பவர் தனது 02.03.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் தென்திருப்பேரை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.921/8-ல் திரு.S.ஆறுமுகநயினார் என்பவர் 1500 சதுரடி பரப்பளவில் பேரூராட்சியின் அனுமதியின்றி முறைகேடாக கட்டடம் கட்டி நெல் மற்றும் வைக்கோல் குடோன் நடத்தி வருவதாக புகார் தெரிவித்துள்ளார்.

தென்திருப்பேரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, மேலக்கல்லாம்பாறையில் திரு.S.ஆறுமுகநயினார் என்பவர் பேரூராட்சியிடமிருந்து எவ்வித வரைபட அனுமதியும் பெறாமல் கட்டடம் கட்டி வருவதை பேரூராட்சியின் செயல் அலுவலர் நேரடி தல ஆய்வு மேற்கொண்டு மேற்படி அனுமதியற்ற கட்டடப் பணியினை நிறுத்தி, உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி திரு.S.ஆறுமுகநயினார் என்பவருக்கு 20.01.2021 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. பின்னர் 12.07.2022 நாளிட்ட நினைவூட்டு அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளது. இதன்பிறகு பேரூராட்சியில் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும் மேற்படி அறிவிப்பில் எவ்வித சட்டப்பிரிவுகளையும் குறிப்பிடாமல் பெயரளவிலேயே பேரூராட்சியால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதாவது, பேரூராட்சியின்

அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்திற்கு கீழ்க்காணும் சட்ட விதிகளின்படி பேரூராட்சி செயல் அலுவலர் செயல்படவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

i. மனுதாரர் புகாராக தெரிவித்த திரு.S.ஆறுமுகநயினார் என்பவர் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டி வந்த கட்டடத்திற்கு கட்டட அனுமதி பெறுவதற்கான வரைபடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் கட்டடத்தினை மூடி சீல் வைக்கும் நடவடிக்கை உட்பட சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56, 57 மற்றும் 85–ன் கீழ் அறிவிப்பாணை பேரூராட்சி செயல் அலுவலரால் கட்டட உரிமையாளருக்கு வழங்கப்படவில்லை.

ii. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவுகள் 216 (1) (2) 316 மற்றும் 317–ன் கீழ் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடத்தை கட்டட உரிமையாளரே இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்கிற அறிவிப்பும் பேரூராட்சி செயல் அலுவலரால் கட்டட உரிமையாளருக்கு அனுப்பப்படவில்லை.

iii. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 216 (3)–ன்கீழ் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடம் என்கிற ஊர்ஜித உத்தரவு (Confirmation Order) பேரூராட்சி செயல் அலுவலரால் கட்டட உரிமையாளரான திரு.S.ஆறுமுகநயினார் என்பவருக்கு அனுப்பப்படவில்லை.

iv. இதனைத் தொடர்ந்து தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலரால் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 317–ன்படி கட்டட உமையாளரை பிராசிகியூசன் செய்வதுடன் பிரிவு 339 (2)–ன்படி அனுமதியின்றி கட்டிய கட்டடத்தை கட்டட உரிமையாளரின் பொறுப்பில் பேரூராட்சியின் சிப்பந்திகளால் இடிக்கப்பட்டு அல்லது மாற்றப்பட்டு அதனால் ஏற்படும் சகல செலவு தொகைகளையும் நகராட்சிகளின் சட்டம் 340 (1), 344 பிரிவுகளின்படி கட்டட உரிமையாளரிடம் வசூலிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

பேரூராட்சியின் அனுமதியின்றி திரு. S.ஆறுமுகநயினார் என்பவர் கட்டிய கட்டடத்திற்கு, கட்டடம் கட்டி வரும் நிலையிலேயே தென்திருப்பேரை செயல் அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டும் மேலே காணும் i முதல் iv வரையிலான பத்திகளில் தெரிவிக்கப்பட்ட எந்தவிதமான சட்டபூர்வ நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருந்தது பேரூராட்சி நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயலையும், முறைகேடாக கட்டிய கட்டடத்திற்கு உடந்தையாக பேரூராட்சி நிர்வாகம் செயல்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இம்முறைமன்ற நடுவம் கருதுகின்ற சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது தவிர மனுதாரர் சமர்ப்பித்த புகார் மனு மீதான விளக்க அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்காத தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலரின் கடமை தவறிய செயலை இம்முறைமன்ற நடுவம் மிக வன்மையாக கண்டிக்கிறது. எனவே, விதிகள்மீறி பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டிய கட்டடத்தின் மீது எவ்வித தொடர் நடவடிக்கையும் எடுக்காமல் காலந்தாழ்த்தியுள்ள மற்றும் கடமை தவறி செயல்பட்ட தென்திருப்பேரை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

The Forum orders that strict disciplinary action should be taken against the Executive Officer of the Thenthiruperai Town Panchayat for his wanton and wilful omission to proceed against the godown builder as per T & C Planning Act, Rules and Regulations besides setting a bad precedent to such law breakers of the area. The Director of Town Panchayat is directed to ensure compliance with the orders of the Forum without any delay or misplaced leniency by issuing only show cause notice that would induce such dereliction of duties by the Executive Officers elsewhere. An action taken report should be sent to this Forum in the next 45 days categorically.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 08–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.கல்லை M. சிந்தா,
82, கீழக்கல்லாம்பாறை, தென்திருப்பேரை போஸ்ட்,
ஏரல் தாலூக்கா, தூத்துக்குடி மாவட்டம் – 628 623.

2) செயல் அலுவலர்,
தென்திருப்பேரை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்– 628 623.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

09/05/23